You must give a reason for this as well as for that, இதற்காகவும் அதற்காகவும் நியாயஞ்சொல்லவேண்டும். But if the sense be, that for the one, the reason has already been given, and that he must likewise give one for the other, it must be expressed, thus: அதைக்குறித்து நீ நியாயஞ்சொன்னதுபோல் இதைக்குறித்தும் நியாயஞ்சொல்லவேண்டும்.

But when it means equality in number, it is expressed thus:

Give him as many hoes as he wants, இவனுக்குவேண்டிய மண்வெட்டிகள் எவ்வளவோ அவ்வளவுகொடு.

ii. With *so* following, as:

As the stars so shall thy seed be, நட்சத்திரங்களெத்தனையோ அத்தனையாய் உன்சந்ததிபெருகும்.

As the sun gives us light by day so does the moon by night, சூரியன் பகலிலே நமக்கு ஒளியைக்கொடுக்கிறதுபோலச்சந்திரன் இராவிலே ஒளியைக்கொடுக்கின்றது.

As the one dieth so dieth the other, எல்லாருஞ் சாகிருர்கள், i. e. *all die,* or சாவாமலிருக்கிறவர்கள் ஒருவருமில்லை.

If you say literally, ஒருவன் மரிக்கிறதுபோல் மற்றவனும் மரிக்கிருன், then the particular kind or manner of death will be pointed out.

iii. With *so* preceding.

I desire to see thy glory, so as I have seen it in thy sanctuary, பரிசுத் தஸ்தலத்திலே உம்முடைய மகிமையைக் கண்டதுபோல் இன்னுங் காணவிரும்புகிறேன்.

Pompey was not so great a man as Cæsar, கைசார்போலப்போம் பேயுபெரியவனல்ல.

My house is not so large as your's, என்னுடைய வீடு உம்முடைய வீட்டைப்போலப்பெரிதல்ல.

iv. With *such,* when it is in fact a relative pronoun; the Tamulian uses the verbal noun in this case, or the relative participle with a noun or pronoun, as:

Let such as presume to advise others, look well to their own conduct, மற்றவர்களுக்குப் புத்திசொல்லத் துணிகிறவர்கள் தங்கள் சொந்த நடக்கையை நன்றாய் நோக்கக்கடவர்கள்.

v. With *for,* or *to,* meaning *with respect to,* it is not expressed, thus:

As for this horse, it was starved to death, இந்தக்குதிரைபட்டினியி னாலே செத்துப்போயிற்று.

As for that matter, we must farther consider it, அந்தக்காரியத்தைக் குறித்து நாம் இன்னும் (or அதிகமாய்) யோசனைபண்ணவேண்டும்.

vi. With *though* or *if.*

He acted as though he were his own master, தானேதனக்கு எசமா னென்றெண்ணிச்செய்தான் or better தானே எசமானைப்போலச் செய்தான்.

We beseech you as though God did beseech you, பராபரன் உங்களை வேண்டிக்கொண்டாற்போல் நாங்கள் உங்களை வேண்டிக்கொள் ளுகிறோம், or better பராபரன் உங்களை வேண்டிக்கொண்டால் எப் படியோ அப்படியே நாங்கள், &c.

12. *At*

Has likewise various significations:

1. When it means *near,* it must be expressed by அருகே, சமீப மாய், &c.

He is at the river, அவன் ஆற்றின் அருகேயிருக்கிறான்.

2. When it means *in a place,* the locative ablative must be used, as:

When we arrived at Madras, we saw the superstition of the natives, நாங்கள் சென்னபட்டணத்திற் சேர்ந்தபொழுது, சனங்களுடைய அவபத்தியைப்பார்த்தோம்.

He lives at Pondicherry, அவன் புதுச்சேரியிலேவாசமாயிருக்கிறான்.

3. Before a word signifying *time* or *business,* the same ablative is used, as:

He rose at 10 *o'clock,* பத்தாம்மணிநேரத்திலே யெழுந்திருந்தான்.

This boy is busy at his task, இந்தப்பையன் தன்வேலையிற்சாக்கிரதையாயிருக்கிறான்.

4. Signifying *the condition of a person,* it should be expressed by the adverbial form, as:

Let us be at peace with all men, நாம் எல்லாமனிதரோடுஞ் சமாதானமாயிருக்கக்கடவோம்.

5. Signifying *in immediate consequence of,* it is expressed variously, thus:

He went to Jaffna at my request, நான்கேட்டபடியினாலேஅவன்யாழ்ப்பாணத்திற்குப்போனான்.

He swooned at the sight of the fire, நெருப்பைக்கண்டமாத்திரத்திலே or கண்டவுடனே or simply கண்டு, சோர்ந்துபோனான்.

At one blow he cut off his head, ஒரேவெட்டாக அவனுடைய தலையைவெட்டினான்.

He came at a call, நான்கூப்பிட்டவுடனே அவன்வந்தான்.

6. Signifying *subjection,* as much as *under,* thus:

These things are all at my command, இந்தக்காரியங்கள்யாவும் என் அதிகாரத்துக்குட்பட்டவைகள்.

7. When connected with *all,* it is rendered by எப்படியும், எவ்விதத்திலும், எவ்வளவும், or any such word denoting *entireness,* as:

At all events I shall come to-morrow, நான்எப்படியும் நாளைக்குவருவேன் or என்னவிருந்தாலும் நான் நாளைக்குவருவேன்.

He did not do this business at all well, இந்தவேலையையவன் எவ்வளவாகிலும் நன்றாய்ச்செய்யவில்லை.

He must not go there at all, அவன் ஒருகாலும் அங்கேபோகக்கூடாது or அவன் அங்கேபோகவேகூடாது.

Not at all may be rendered also by பரிச்சேதம் or ஒருவிதத்திலும் or ஏகதேசமாயாலும், with a negative verb, as:

He must not marry at all, அவன்பரிச்சேதம் (or ஏகதேசமாயாலும்) விவாகம்பண்ணக்கூடாது.

13. *Before*

Is usually expressed by, முன்னே, முன்பு, முன்பாக, முன்னாலே, when referring to *place,* as:

My house is before that of the Doctor's, என்வீடு வைத்தியருடைய வீட்டுக்குமுன்னே (or முன்னாக) இருக்கின்றது.

They are gone to the camp before us, அவர்கள் எங்களுக்கு முன்பாகப்பாளயக்துக்குப்போனார்கள்.

We halted before the mountain, மலையின் அடியிலே இறங்கினோம்.

Stand before him! அவனுக்குமுன்பாகநில்லு.

When it means *in presence of,* particularly *of God,* or *of great men,* it is better expressed by சந்நிதானத்திலே, as:

Let us go before God with thanksgiving! தத்தேலோடே பரமபரனு டைய சந்நிதானத்திலே செல்வோமாக.

The phrases *before your eyes, before your face, before you,* may be literally rendered by, உங்கள் கண்களுக்குமுன்பாக, உன்முகத் துக்கு முன்பாக, உனக்குமுன்பாக; or by நீங்கள் பார்க்கத்தக்க தாக, &c.

The phrase *from before thee,* means *from thy sight* or *from thy face,* which must be expressed accordingly, as:

I will drive them out from before thee, அவர்கள் உன்னைவிட்டோடிப் போகும்படிசெய்வேன், or அவர்கள் உனக்குமுன்னில்லாதபடிக்கு அவர்களைத்துரத்துவேன்.

ii. When it refers to *time,* முன்னே or முன்னமே is used, as:

I arrived here before you, நான்உமக்குமுன்னே இங்கேசேர்ந்தேன்.
He died before him, இவனுக்குமுன்னமே அவன் இறந்துபோனான்.

iii. When it means *in preference to,* the phrase must be expressed in various ways, as:

Abel was accepted before Cain, காயீனையல்ல ஆபேலை அங்கீகரித் தார், i. e. *He accepted, not Cain, but Abel.* If it be literally rendered, காயீனுக்குமுன்னே ஆபேலை அங்கீகரித்தார், it means *that Cain also was accepted only later than Abel.*

14. *Behind,*

Like *after,* is translated by பின், பின்பு, பின்னாலே. I mention here only such phrases as require a different rendering.

On my leaving England, I left various things behind me, நான் இங் கிலாந்தைவிட்டுப் புறப்பட்டபொழுது, பலவகையான பதார்த்தங்க ளைவிட்டுவந்தேன். If it was from forgetfulness, then it must be thus: பலவகையான பதார்த்தங்களை மறந்துவிட்டுவந்தேன், because the former implies design.
He is not behind him in doing good, தருமங்களைச்செய்கிறதில் அவ னுக்கு இவன் தாழ்வில்லை.

15. *Beneath* or *Below*

When it means,

1. *Under, lower in place,* கீழ் expresses it, as:

It stands beneath the table, அதுபலகையின்கீழ்நிற்கின்றது.
The earth is beneath the sky, பூமிவானத்திற்குக்கீழிருக்கின்றது.

2. *Under,* as overborne or overwhelmed by some pressure, the phrase must have another form, as:

I sink beneath the oppression of that man, அந்தமனிதன்செய்கிறதன்

பத்தினாலே சோர்ந்துபோகிறேன் or கெட்டுப்போகிறேன், *I faint because of the oppression*, &c. or அந்தமனிதன்செய்கிறதுன்பமாகி யசுவமைக்குள்ளாயிருக்கிறேன்.

3. *Lower in rank, excellency*, &c. தாழ்ந்தது expresses it, as:
The minister is below the king, மந்திரியானவன் இராசனுக்குத்தாழ்ந்திருக்கிறான்.

4. *Unworthy of, unbecoming,* the phrase must be given accordingly, as:
To slander is beneath the character of a virtuous man, மற்றவர்களை நிந்திக்கிறது நல்லமனிதனுக்கேற்றதல்ல or உரியதல்ல or தகாது or நல்லமனிதனுக்கேலாது.

16. *Besides*

1. As a preposition, when it means,

i. *Near*, the Tamulian uses அருகே, கிட்ட, பக்கத்திலே, as:
He stood beside me, அவன் என்னருகேநின்றான் or என்பக்கத்திலே நின்றான் or என்மருங்குநின்றான்.

ii. *Over and above,* அல்லாமல், or அன்றி is used, as:
Besides the congregation, there were also two Priests, சபையாரல்லாமல் இரண்டுகுருக்களுமிருந்தார்கள்.
Is there a God beside me? என்னையன்றி வேறுதேவனுண்டா.

2. As an adverb, at the beginning of a sentence, அல்லாமலும் or அன்றியும் expresses it. See § LXXIII.

17. *Between*

Is usually expressed by putting the two nouns in the dative case with உம், affixed to each, thus:
What is the distance between Madras and Madura? சென்னபட்டணத்துக்கும் மதுரைக்கும் எவ்வளவுதூரம்.

But observe, that though *between* usually requires two things or persons, the English often expresses only one of them, implying the other; in Tamil this cannot be done, without obscuring or changing the sense; both must be expressed, as:
Between us there is no difference, உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லை, *between thee and me*, &c. we may indeed say, நமக்குவித்தியாசமில்லை, but that is ambiguous.

18. *Beyond*

When it means,

1. *On the further side of,* அப்புறம், அப்புறத்திலே, or அப்புறமாய், is proper, as:
We went beyond the town, நாம்ஊருக்கப்புறம்போனோம்.

We halted beyond the river, ஆற்றுக்கப்புறத்திற்றங்கினோம். If the shore be particularly meant, then அக்கரையிலே must be used.

2. *Exceeding, above, surpassing,* the phrase must receive another, form, as:

He was afflicted beyond measure, அளவில்லாத உபத்திரவத்தை யடைந்தான்.

Do not act beyond your sphere, உன்னுடைய நிலைமைக்குமேலே நடவாதிருப்பாயாக or உன்னுடையகடமைக்கு மிஞ்சினதாக ஒன்றுஞ் செய்யாதிரு.

19. *Both*

Is expressed by affixing உம் to both nouns, as:

Let them both come, அவனையும் அவளையும்வரச்சொல்லு or இரண்டு பேரையும்வரச்சொல்லு.

He killed both the tiger and the elephant, புலியையும் யானையையுங் கொலைசெய்தான், (or புலியானைஇரண்டையும்.)

20. *But*

When it means,

1. *Except,* the Tamulian uses, தவிர, ஒழிய or இன்றி, as:

All came but Vedamootoo, வேதமுத்துத்தவிர எல்லாரும் வந்தார்கள்.

He brought every thing but one box, ஒருபெட்டிதவிரமற்றப் பண்டங்களெல்லாவற்றையுங்கொண்டுவந்தான்.

2. When it means *only, nothing more than,* மாத்திரம் expresses it, as:

He spoke but two sentences, இரண்டு வாக்கியங்களைமாத்திரஞ்சொன்னார்.

Stay but one day, ஒருநாள்மாத்திரம்பொறு, that is, if *stay* mean *be patient;* but if it mean *to stop, to remain,* பொறுத்திரு or தங்கியிரு must be said instead of பொறு.

3. When it means *not more than, even,* the Tamulian expresses it by தான் or தானே, or merely by the emphatic ஏ, as:

Your demand is but reasonable, நீ கேட்டுக்கொண்டதுநியாயந்தான் or நியாயமே.

It is but what is necessary, இதுவேண்டுவதுதான்.

He came but now, அவன்இப்பொழுதுதான்வந்தான்.

4. When meaning *otherwise than,* the Tamulian uses the emphatic ஏ, as:

I cannot but cry out, i. e. *I must cry out,* நான்சத்தமிடவேண்டுமே or நான் சத்தமிடாமலிருக்கக்கூடாதே.

5. When it follows a negation, the Tamulian changes it and the negative into the positive form, as:

There is no day but he comes to my house, i. e. *he comes every day to my house,* அவன் நாடோறும் என் வீட்டுக்குவருகிறான்: to say, அவன் என்வீட்டுக்குவராதநாளில்லை, would define or determine the time rather than his coming.

There is none but knows it, யாவரும் அதையறிவார்கள் or அதை அறியாதவர்கள் ஒருவருமில்லை.

6. When it merely connects two sentences, or simply points out a contrary condition or circumstance, the Tamulian does not particularly express it, as:

I went to see him, but he was not at home, நான் அவனைக்கண்டு பேசப்போனேன் அவன் வீட்டிலேயில்லை.

He is not diligent, but lazy, அவன் சாக்கிரதையாயிராமற் சோம்பலாயிருக்கிறான்.

He told me the affair, but I would not believe it, அவன் இந்தக்காரியத்தை யெனக்குச்சொன்னான், நான் அதை நம்பவில்லை.

He came not to do evil but to do good, அவன் தீமையை யல்ல நன்மையைச்செய்ய வந்தான்.

This will not be done by human power, but by the power of God, இது மனிதருடைய வல்லமையினாலேயல்ல, பராபரனுடைய வல்லமையினாலேயாகும், or இது மனிதருடைய வல்லமையினாலே யாக மாட்டாது பராபரனுடைய வல்லமையினாலே யாகும், or இது பராபரனுடைய வல்லமையன்றி மனிதருடையவல்லமையினாலே ஆக மாட்டாது.

Note.—It is evident that *but* in such sentences is expressed by the negative. When, however, *but* heads a new sentence in an argument, it is by no means proper to use ஆனால், as is frequently done; because, ஆனால் being the subjunctive mode of ஆகிறது, means properly *if it be so,* but by ஆனாலும், ஆகிலும், அப்படியிருந்தும், in the application of which the sense must be considered, and the use discriminated according to § CIII. LVI. 8, LVII. 2, 3.

21. *By*

When it denotes,

1. The *agent* or *cause,* by which anything is effected or obtained, the instrumental ablative expresses it, as:

This flower was plucked by me, இந்தப்பூ என்னாலே பறிக்கப்பட்டது or இது நான் பறித்த பூ.

The fever came by a cold, குளிர்ச்சியினாலே சுரம்வந்தது.

2. When it means *the instrument,* the same ablative is used; or கொண்டு, with the accusative case; or the phrase is turned altogether, as:

The wound was made by a knife, இந்தக்காயங்கத்தியினாலுண்டா

யிற்று. Observe, the Tamulian would not say, உண்டாக்கப்பட்டது because the knife was not the active instrument, which was a person. If the phrase be *he wounded me by (with) a knife,* then he would say thus, அவன் ஒரு கத்தியைக்கொண்டு (or எடுத்து) என்னைக்காயப்படுத்தினான்.

3. When it means *the method* in which any progressive action is performed, as:

The business was done by little and little, இந்தக்காரியங்கொஞ்சக்கொஞ்சமாய்ச்செய்யப்பட்டது.

4. When it means *quantity,* the noun must be doubled, as:

I bought these chairs by the dozen, பன்னிரண்டு பன்னிரண்டாக இந்த நாற்காலிகளைவாங்கினேன்.

This house fell by pieces, இந்த வீடு துண்டு துண்டாக இடிந்துபோயிற்று.

5. When it denotes *the object of explanation,* the Tamulian changes the phrase altogether, as:

What do you mean by spirit? ஆவியென்பதற்கு அருத்தமென்ன or ஆவியென்பதென்ன or ஆவியாவதென்ன; should you say ஆவியைக்கொண்டு நீ நினைக்கிறதென்ன, the meaning will be, *what do you think* by means of (or through the spirit.)

6. When denoting *place,* மேல், or some other suitable preposition is required, as:

They fought by sea, சமுத்திரத்தின்மேல் (or சமுத்திரத்திலே) யுத்தம் பண்ணினார்கள்.

7. When denoting *permission,* படி, படியினாலே, or another form is required, as:

You may go by my leave, நான் உத்தரவுகொடுத்தபடி (or கொடுத்தபடியினாலே) நீ போகலாம் or நான் உத்தரவு கொடுத்தேன் நீ போகலாம்.

8. When denoting *the difference* between two things, the Tamulian turns the phrase, as:

Rice is now cheaper than formerly by a fanam a marcal, முன்னிலும் ஒருமரக்கால் அரிசிக்கு ஒரு பணம் நயமாயிருக்கிறது.

9. When denoting *passage,* வழியாய் with the oblique case is required, as:

We came hither by Tranquebar, நாங்கள் தரங்கம்பாடியின் வழியாய் இவ்விடத்துக்குவந்தோம்.

10. When denoting *near to,* அருகே, இடத்தில் or any such word is required, as:

The General stood by the King, சேனாபதி இராசாவருகே (இராசாவி னிடத்தில்) நின்றான்.

11. When denoting *the absence of all others,* the Tamulian uses தனியே; or turns the phrase altogether, as:

He came by himself, அவன் தனியேவந்தான்.
They came by themselves, வேறொருவரில்லாமல் வந்தார்கள் or தாங் கள்மாத்திரம் வந்தார்கள்.

12. When denoting *the solemn form of swearing,* it must be expressed in Tamil according to the sense of the connexion, as:

By my life! thou shalt die, நீ சாவாயென்று என்சீவன் மேலேயாணை யிட்டுச்சொல்லுகிறேன்.

13. When it denotes, *within a short time,* it must be rendered accordingly, as:

He will come by and by, கொஞ்சக்காலத்துக்குள்ளே (or கொஞ்சக் காலத்துக்குப்பின்பு) வருவான்.

Note.—By the by, a phrase to call the attention of another, cannot be well expressed in Tamil; perhaps we may say, இன்னம் ஒருபேச் சிருக்கிறது கேள், i. e. *there is still another subject; hear!*

14. When denoting *substitution,* or *by proxy of,* the Tamulian circumscribes it, as:

He appeared by his attorney, அவன் தான் வராமற்றன் காரியக்காரனை யனுப்பினான், i. e. *he himself did not come; he sent his attorney.*

22. *Either, or*

When they mean *both,* are expressed by adding உம் to both nouns or actions, as:

Averse either to contradict or to blame, எதிர்த்துப்பேசும்படிக்குங் குற்றஞ்சாற்றும்படிக்கும் மனதில்லாமல்.

But when they mean separate things, the Tamulian expresses them by adding ஆவது to both nouns, &c., as:

Either this man or that woman is guilty of the crime, இந்தமனித னாவது அந்தஸ்திரீயாவது இந்தக்குற்றஞ்செய்திருப்பார்கள்.

But frequently they are expressed by அல்லது or அல்லவென்றால், placed before every clause that is proposed, except the first, thus:

Either stay to see the end of the affair, or go and be silent about it, இந்தக்காரியத்தின்முடிவை யறிகிறவரைக்கும் இரு அல்லவென்றால் இதைக்குறித்து ஒன்றும்பேசாமற்போ, lit: *stay! till you see the end of the affair; if not,* (i. e. *if you say, I will not stay) then go,* &c.

Either gold or silver or brass will be found here, இங்கே பொன் அல்லது வெள்ளி அல்லது பித்தளை காணப்படும்.
We must (either) believe or perish, நாம் விசுவாசிக்கவேண்டும் அல்லது கெட்டுப்போகவேண்டும்.

23. *Except.*

When it means *but, exclusively of,* it is expressed as stated § XCV.

When it means *unless,* it is expressed by the negative verb with விட்டால், as:

Except a man be born again, he cannot see the kingdom of God, ஒருமனிதன் மறுபடியும்பிறவாவிட்டால் மோட்ச இராச்சியத்தைக் காணமாட்டான்.

24. *For.*

1. The *conjunction* is expressed by படியினாலே, with a relative participle, or by the causal ablative of the verbal noun, or by ஆகையால், ஆதலால் or ஆனபடியினாலே, added to any sentence which states the cause or reason of some effect or consequence. This sentence usually precedes that containing the effect, &c., as:

I will send an angel before thee; for I will not go up in the midst of thee, for thou art a stiff-necked people, நீங்கள் வணங்காதகழுத்துள்ள சனங்களானபடியினாலே நான் உங்களுடனே கூடவரமாட்டேன், ஆதலால் ஒருதூதனை யுங்களுக்கு முன்நடக்க அனுப்புவேன். This last ஆதலால் is even not required; and the sentence may be given thus, நான் கூடவராமல், ஒரு தூதனையுங்களுக்கு முன் நடக்க அனுப்புவேன்.

See farther on the subject and other instances § § LXXXII. CIX. CXV.

When a long argument follows, the effect may be stated first, and the causal sentences introduced by என்னத்தினாலென்றால் or எப்படியென்றால் or என்னத்திற்கெனில், as the sense may require. But even then it is proper at the end of the argument to repeat the effect. See § CXV.

2. The *preposition* is variously rendered;

i. When it means *for the sake of, in advantage of, in order to,* &c. the dative case with ஆக, or the relative participle with படிக்கு expresses it, as:

Labour not for the meat that perisheth, அழிந்துபோகும் போசனத்துக்காக (or போசனம் அடையும்படிக்குப்) பிரயாசப்படாதிருங்கள்.
He wrote for money, பணத்துக்காக எழுதினான்.

ii. When it means *duration,* and is united with words of time, the Tamulian expresses it by the nominative, as:

He has not come for many days, அநேகநாள் அவன்வரவில்லை.

iii. When it means *accommodation, adaptation, belonging to, becoming, capability, in proportion to,* the dative case expresses it, as:

I am not fit for this work, நான் இந்தவேலைக்குத்தகுதியானவனல்ல.

Commanding is for the king; obedience for the subjects, கட்டளையிடு தல் இராசாவுக்குங் கீழ்ப்படியுதல் குடிகளுக்குமேற்றவைகள்.

It is hard for me to learn, படிக்கிறது எனக்கரிதாயிருக்கிறது or வருத் தமாயிருக்கிறது.

He is tall for his age, இவனுடையவயதுக்குத்தக்க வளர்த்திக்குமேலா யிருக்கிறான், or உயர்ந்திருக்கிறான் or இவன் நெட்டையன்.

He is small for his age, இவனுக்கு வயதுக்குத்தக்க வளர்த்தியில்லை, or இவன் குட்டையன்.

iv. When it means *in exchange, instead of,* the dative with either ஆக or பதிலாக is used, as:

I gave him a ground for his house, அவன்வீட்டுக்காக (or வீட்டுக்குப் பதிலாக) ஒருநிலத்தைக்கொடுத்தேன்.

v. When it means *in remedy of, in search of,* or when it stands connected with certain verbs, it must be expressed accordingly, as:

This medicine is for the fever, இந்தமருந்து சுரத்தை நீக்கும் or இதுசு ரத்துக்குரியமருந்து.

He went for the sheep, அவன் ஆடுகளைத்தேடப்போனான்.

He waited for the gentleman, துரை வருகிறவரைக்குங் காத்திருந் தான்.

They lay for dead three days, மூன்றுநாள் அவர்கள்செத்தவர்கள் போலக்கிடந்தார்கள்.

He wished for peace, சமாதானத்தைவிரும்பினான்.

25. *From*

has also many significations, as:

1. Its primary meaning of *away,* denoting *privation, separation, transmission, emission,* is expressed by the locative ablative with இருந்து or நின்று, or by the accusative with விட்டு, as:

The land was taken from him, தேசம் அவனிலிருந்து நீக்கப்பட்டது.

My friend departed from me, and united himself to another, என்சிநேகி தன் என்னைவிட்டு வேறொருவனுடனே இசைந்தான்.

The Governor sent troops from Madras, பெரியதுரை சென்னபட்ட ணத்திலிருந்து சேனைகளையனுப்பினார்.

2. When it means *reception* or *attainment,* the ablative இடத்தில் expresses it, as:

I learned this from him (of him) நான் இதையவரிடத்திற்கற்றுக் கொண்டேன்.

He got only ten thousand Rupees from me, அவன்பதினாயிரம் ரூபாய் மாத்திரம் என்னிடத்திற்பெற்றுக்கொண்டான்.

3. When it denotes *procession* or *descent*, the instrumental ablative is used, as:

From ignorance of the true God proceeds wickedness, மெய்யானதேவனையறியாமலிருக்கிறதினாலே துன்மார்க்கமுண்டாகும்.

His lavishness proceeds from kindness, தயவினாலே அவர் ஆஸ்திகளைச் செலவழிக்கிறார், lit: *he spends (his) riches from kindness.*

From thee, kings shall proceed, உன்னாலே இராசாக்கள் தோன்றுவார்கள்.

But David descended from Abraham, தாவீது ஆபிரகாமின் சந்ததியிலே பிறந்தான், i. e. *David was born in the posterity of Abraham.*

4. When it means *exemption*, the Tamulian uses இல்லாமல், as:
Christ was free from sin, கிறிஸ்து பாவமில்லாதவராயிருந்தார்.

5. When it implies *succession of time,* முதல் or முதற்கொண்டு must be used, as:

The gentleman was engaged from morning till night, துரை உதயம் முதல் இராத்திரிவரைக்கும் அலுவலாயிருந்தார்.

From the beginning of the world such things have not been heard, உலகமுண்டானது முதற்கொண்டு இப்படிப்பட்டகாரியங்கள் கேள்விப்படவில்லை.

Note.—The phrase *from generation to generation,* is expressed, thus: தலைமுறை தலைமுறையாய்.

6. When it is united with verbs denoting *deliverance*, it is sometimes expressed by the ablative of motion with இருந்து or நின்று; sometimes by the dative, sometimes the phrase must receive a different form, as:

See that you be saved from your sins, உன் பாவங்களினின்று நீங்கி இரட்சிக்கப்படும்படிக்குப் பார்ப்பாயாக or, simply, உன் பாவங்களை நீக்கும்படிக்குப்பார்ப்பாயாக.

Christ only can deliver us from hell, நாம் நரகத்திற்குப் போகாதபடிக்குக் கிறிஸ்துமாத்திரம் நம்மை யிரட்சிக்கத்தக்கவர். Observe that you cannot say here, நரகத்தினின்று நம்மை யிரட்சிக்கும்படிக்கு, &c. because this supposes that we are already in it. This is to be observed also in the following sentence;

Sir, deliver us from prison; if we are already in it, we may say, ஐயா இந்தக் காவற்கூடத்தினின்று எங்களை விடுதலையாக்கவேண்டும். But if we are not yet in, it must be rendered, ஐயா நாங்கள் காவற்கூடத்துக்குப் போகாதபடிக்கு எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

Deliver us from this dangerous sickness, மோசத்தைக்கொடுக்கும் இந்தவியாதிக்கு எங்களை விலக்கவேண்டும்.
The poor people have been exempted from paying taxes, ஏழைச் சனங்கள் வரிசெலுத்தாதபடிக்கு உத்தரவு பெற்ருர்கள், i. e. *the poor people have received permission* (or *order*) *not to pay taxes.*

26. *How.*

1. When the sentence is properly *interrogative*, it is rendered by எப்படி, எவ்வளவு, எத்தனை, எவ்விதமாய், எதினலே, &c. according to the connexion, as:

How can these things be? இவை யெப்படியாம்.
How large was the sum? எவ்வளவுபணமிருந்தது.
How did this come to pass? இது எவ்விதமாய்நடந்தது.

2. When it simply denotes *the manner*, the Tamulian omits the interrogation, as:

How a seed grows up into a tree, and how the mind acts upon the body, are mysteries which we cannot explain, விதை மரமாகிற வகையும் மனது சரீரத்தைநடப்பிக்கிறவகையும் நம்மாற்சொல்லக் கூடாத இரகசியங்களாயிருக்கின்றன.

Remember how kind he was to us, அவர் நமக்குத்தயவாயிருந்ததை நினைத்துக்கொள், (or எத்தனை தயவாயிருந்தாரென்று.)

3. When it is used in exclamation to denote *greatness* and *wonder*, the interrogative may be used with ஒ or ஆ, prefixed, as:

How dreadful is this place! ஆ, இந்தத்தலம் எத்தனைபயங்கொடுக்கிறதாயிருக்கின்றது.

How admirably is this done! ஆ, இது எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கதாயச்செய்யப்பட்டது.

O God, how excellent is thy name in all the earth! ஆ, பராபரனே உம்முடைய திருநாமம் பூமியெங்கும் எத்தனை மேன்மையாயிருக்கின்றது.

But when the wonder is at any thing which causes regret or sorrow, it is better to use ஐயோ, without the interrogative, thus:

How few can be found whose activity has not been misemployed! ஐயோ தங்கள் திராணிகளை வம்பாய்ச்செலுத்தாதபேர்கள் சிலர்மாத்திரங்காணப்படுகிருர்கள். If we say எவ்வளவுபேர், it will be ambiguous, meaning *as well many as few.*

How wretchedly is this man going on! ஐயோ இந்தமனிதன் மிகவுங் கெட்டநடத்தையுள்ளவனுயிருக்கிருன்.

27. *However.*

1. When it means *in whatsoever manner*, எப்படியும், எப்படியாகிலும், எவ்விதத்திலும், or எவ்விதமாகிலும், expresses it, as:

I must, however, go thither, எப்படியாகிலும் நான் அங்கே போக வேண்டும்.

2. When it means *at all events, happen what will,* as:

However ill I may be, I shall go to Canjepooram, எனக்கு எவ்வளவு வியாதியிருந்தாலுங் காஞ்சிபுரத்துக்குப்போவேன்.

3. When it means *nevertheless, yet, but,* &c. அப்படியிருக்கும், அப்படியிருந்தாலும், ஆகிலும், ஆனாலும், will express it.

The body was ordered to remain there for many days; in the night, however, it was taken down, சரீரம் அங்கே அநேக நாளிருக்கும்படி கட்டளையிருந்தது அப்படியிருந்தும், இராத்திரியிலே அது இறக்கப்பட்டது, lit: *order was given that the body should remain there for many days; nevertheless it was taken,* &c. &c.

The intentions of that gentleman were always good; however he was a man of lavish expense, அந்தத்துரை எப்பொழுதும் நல்லவிருப்பமுள்ளவராயிருந்தும், மிகுந்த பணத்தை வீணுய்ச்செலவழித்தார்.

28. *If*

is expressed by the subjunctive mood of the verb in ஆல் or இல், as:

If he be but discreet, he will succeed, அவன்புத்தியாய் (or விவேகமாய்) நடந்தால் அவனுடையகாரியஞ்சித்திக்கும்.

If she is sincere, I shall be happy, அவள் உண்மையுள்ளவளானால் (or வளாயிருந்தால்) எனக்குச்சந்தோஷமுண்டாயிருக்கும்.

When not *supposition* but *time* is implied, the sense must be given accordingly, as:

If thou be afflicted repine not, உனக்குஉபத்திரவம் வருங்காலத்தில் (or வரும்பொழுது) விசனப்படாதிருப்பாயாக.

When *if* is connected with *not,* it must be rendered by இல்லாவிட்டால் or better by repeating the verb negatively and adding விட்டால், as:

If he come, I will speak with him; if not, I cannot help him, அவன் வந்தால் அவனோடேபேசுவேன், அவன் வராவிட்டால், நான் அவனுக்கு உதவிசெய்யேன். Here observe that இல்லாவிட்டால் merely refers to either வந்தால் or பேசுவேன்.

29. *In.*

1. When it denotes *the place or time where and when any thing is present,* the ablative in இல், (6th case) is used, as:

He is in the house, வீட்டிலேயிருக்கிறன்.

He lives in Madras, அவர் சென்னபட்டணத்திலே வாசம்பண்ணுகிறர்.

This happened in the same year, இது அந்தவருஷத்திலே நடந்தது.

He is steady in the pursuit of that science; அந்தக்கல்வியை யடைந்து கொள்ளத்தேடுகிறதில் உறுதியாயிருக்கிறான்.

2. When denoting *the state or thing present at any time,* the Tamulian puts the noun which expresses the state or condition, in the form of a verb or adverb, as:

He is in prosperity, அவர் வாழ்ந்திருக்கிறார் or அவர் வாழ்வை யுடையவர் or வாழ்விலிருக்கிறார்.

He went away in anger, அவன் கோபமாய்ப்போனான் or கோபத் தோடே, &c.

I will lie down in peace and dwell in safety, நான் சமாதானத்தோடே படுத்துக்கொண்டு பத்திரமாயிருப்பேன்.

The upright in heart, உண்மையுள்ள இருதயமுடையவர்கள் or கபட மில்லாத இருதயமுள்ளவர்கள்.

He came in haste, அவன் தீவரமாய்வந்தான்.

It is in his power to do it, அவன் இப்படிச்செய்ய வல்லமையுடை யவன் or இது அவனாலே நடக்கும்.

It was useful in promoting domestic concord, சமுசாரத்தில் சமாதான சௌக்கியமுண்டாகிறதற்கு இது பிரயோசனமாயிருந்தது.

3. When connected with *behalf,* meaning *for,* the dative with ஆக, expresses it, as:

He spoke in my behalf, அவர் எனக்காகப்பேசினார்.

4. In several phrases the causal case expresses it, as:

In that he said a new covenant, he abolished the old, புதிதானஉடன் படிக்கையென்று அவர்சொன்னதினாலே பழைய உடன்படிக்கை யை நீக்கினார்.

Inasmuch as all men are sinners, they are all under condemnation, எல்லா மனிதர்களும் பாவிகளாயிருக்கிறதால் அவர்களெல்லாரும் ஆக்கினைக்கேதுவாயிருக்கிறார்கள்.

Into is more particularly expressed by the dative with உள், often also by the ablative: in இல், as:

The Lady returned into the room, அம்மாளவர்கள் அறைக்குள்ளே திரும்பவந்தார்கள்.

In this, as in all other particles, much depends upon the verb with which it stands connected, agreeably to which it must be expressed, thus:

He introduced me to his family, அவர் தம்முடைய மனைவியையும், பிள்ளைகளையும் எனக்குக்காட்டினார், lit: *he showed me his wife and children.*

The fatigue threw me into a fever, இளைப்பு எனக்குச்சுரம்வரும்படிக் கேதுவாயிருந்தது, or இளைப்பு என்னைச்சுரத்துக்குள்ளே தள்ளிற்று.

30. *Lest*, or *That not*,

is often expressed by the negative participle with படிக்கு, as:

I hide it, lest it should be lost, இது இழந்து போகாதபடிக்கு மறைக்கிறேன்.

He gave him medicine, lest he should die, அவன் சாவாதபடிக்கு (or சாவாதிருக்கும்படிக்கு) அவனுக்கு மருந்துகொடுத்தார்.

But when the other part of the sentence also has a negative, this mode will be very ambiguous. The Tamulian makes two sentences of it, and repeats the verb in the subjunctive mode, as:

Ye shall not eat of the fruit, lest ye die, நீங்கள் அந்தக்கனியைச்சாப்பிடக்கூடாது சாப்பிட்டாற்சாவீர்கள், lit: *you shall not eat the fruit; if you eat, you will die.*

Love not sleep, lest thou come to poverty, தூக்கத்தை விரும்பாதிருப்பாயாக விரும்பினாற்றரித்திரனாவாய்.

Do not go up the mount to fight, lest he be slain, யுத்தம்பண்ணும்படிக்கு மலையின்மேலேறிப்போகாதிருங்கள், ஏறிப்போனால் அடிக்கப்படுவீர்கள்.

31. *More.*

The particle denoting the comparative degree, answered by *than*, see the article *than.*

32. *Most.*

1. The adjective *most*, when it signifies the *superlative* of *some* or *many*, is expressed by எல்லாம், and by எல்லாரும், the noun being then put in the ablative இல், with உம், as:

Leprosy is the most dreadful disease, எல்லாவியாதிகளிலுங்குட்டவியாதியே பொல்லாதது.

Ramasamy is the most obstinate of mankind, எல்லாமனிதர்களிலும் இராமசாமி முருட்டாட்டமுள்ளவனாயிருக்கிறான்.

God is most high, பராபரன் எல்லாரிலும் மேலானவர்.

The ablative of comparison may be followed also by மிகவும் or மிகுந்த, as, in the above instances, மிகவும்பொல்லாதது, மிகுந்தமுருட்டாட்டமுள்ளவன் &c.; but this is not necessary.

2. When it is used as a substantive, அதிகம், அநேகம், or மிகுதி, will answer it, thus:

Most of the churches were pulled down, கோயில்கள் மிகுதியாயிடிக்கப்பட்டன, or the Tamulian will rather say கோயில்கள் பாதிக்கு மேலாக இடிக்கப்பட்டன, i. e. *more than half of the churches.*

Ten fanams is the most I will give, பத்துபணத்துக்கு அதிகமாய்க் கொடுக்கமாட்டேன்.

3. When it is used adverbially with *at*, it must be variously rendered, thus:

His downfal will be protracted a few days at the most, அவன்கெட்டுப்போகிறதற்கு அதிகநாட்செல்லாது.

A hundred rupees at most will suffice for the building, வீடுகட்டவேண்டுமானால் நூறுரூபாய்க்குமேலே செல்லமாட்டாது, lit: *if you will build the house, it will not cost beyond* 100 *rupees.* Here வேண்டுமானால் is necessary, because of மாட்டாது. But if the phrase were in the affirmative, as: *It will cost* 100 *rupees to build the house,* then the dative will be proper, as: வீடுகட்டுகிறதற்கு நூறுரூபாய்செல்லும்.

33. *Neither, Nor,*

are expressed by உம், affixed to the nouns, with the verb in the negative form, as:

Neither light nor air entered our room, ஒளியுங்காற்றும் எங்கள் அறையில் வரவில்லை.

Ye shall neither eat of it, nor touch it, நீங்கள் அதைப்புசிக்கவுந் தொடவுங்கூடாது.

Neither despise nor oppose what thou dost not understand, உனக்குத் தெரியாததை நீ அசட்டைபண்ணவும் விரோதிக்கவுங்கூடாது.

The dog would neither eat the straw himself, nor suffer the ox to eat it, நாயானது இந்தவைக்கோலைத்தான் தின்னவுமில்லை மாடுதின்னும்படிக்கு இடங்கொடுக்கவுமில்லை.

When the verb is in the future tense ஆகிலும், or ஆனாலும், may be used for உம், as:

Neither good nor evil shall be done to you, நன்மையாகிலுந் தீமையாகிலும் உனக்குச்செய்யப்படாது.

Neither gold nor silver, nor estates, will make you truly happy, பொன்னாகிலும், வெள்ளியாகிலும், நிலங்களாகிலும், உனக்குமெய்யான பாக்கியத்தைக்கொடுக்கமாட்டாது.

In this instance உம் or ஆவது, will do as well.

34. *Notwithstanding* or *Nevertheless,*

is generally expressed by the third verbal participle, as:

Notwithstanding all the opposition which exists in Ireland to the cause of Bible education, it is on the increase, தேவவசனத்தின்படிபிள்ளைகளைவளர்க்கிறதற்கு ஐருலந்து தேசத்தில் மிகுந்த விரோதமுண்டாயிருந்தும், தேவவசனத்தின்படியே வளர்க்கிறது மேன்மேலும்வழக்கமாகின்றது.

Notwithstanding this, he came, அப்படியிருந்தும் அவன் வந்தான்.

35. *Now*

is literally expressed by இப்பொழுது; it cannot, however, be used unless the present time be meant, as:

Now seek to be saved, இப்பொழுதுஇரட்சிப்பையடையும்படிதேடு.

When, therefore, *now* is used merely as an emphatic or expletive particle, it requires no rendering in Tamil. It may often be regarded as a conjunction, to introduce an explanation of the preceding sentence, and then it may be rendered by a corresponding word in Tamil, இதைக்குறித்து, or such like, as:

This man asserts that Vishnoo is the true God; now you must understand that, &c. விஷ்ணு மெய்யாய்த்தேவனுயிருக்கிறனென்று இவன் சொல்லுகிறன் அதைக்குறித்து நீங்கள் அறியவேண்டியதென்னவெனில்,

When it is united with *then*, the Tamulian expresses it by அடிக்கடி, as:

Now and then he said, there is a Ghost there, அங்கே ஆவேஷமென்று அவன் அடிக்கடி சொன்றன்.

36. *O! Oh!* See under *Ah!*

37. *Of.*

This preposition also has in English many significations, which must be duly considered and expressed in Tamil accordingly.

1. When it denotes possession, the 6th (or genitive) case, or the oblique case இன், is used, as:

The justice of God is unimpeachable, பராபரனுடைய நீதி குற்றஞ் சாற்றப்படாததாயிருக்கின்றது.

The goodness of God is very great, பராபரனுடையதயவு மிகுதியாயிருக்கின்றது.

Jacob was the son of Isaac, யாக்கோபு ஈசாக்கின்குமாரன்.

Europeans are apt to use the 6th case in Tamil indiscriminately for the genitive case in English, or Greek; by which the language is not a little obscured, and the sense misinterpreted. Here are a few instances:

The righteousness of God, is பராபரனுடைய நீதி, namely, the attribute of God; but in Rom. iii. 21, the same expression must be rendered, பராபரனுக்கேற்றநீதி, or பராபரனுக்கு முன்பாகச் செல்லுகிற நீதி, or பராபரன் உண்டுபண்ணின நீதி, *the righteousness which is accepted of God,* or *which God has made.*

The faith of Jesus Christ, is இயேசுக்கிறிஸ்துவினுடைய விசுவாசம் namely, the faith which Christ himself had; but in Rom. iii. 21, it must be இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம், *the faith which lays hold on Christ.*

The knowledge of God, பராபரனுடைய அறிவு means, the knowledge which God himself has; but if the meaning be *our knowledge of God,* it must be, பராபரனையறிகிற அறிவு.

The fear of God, cannot be rendered, பராபரனுடைய பயம், which means, the fear which God himself has; but பராபரனுக்குப்பயப் படுகிறபயம்.

The praise of the Saviour, இரட்சகருடைய துதி means, the praise which he himself sets forth; but இரட்சகனைத்துதிக்கிற துதி, *the praise which praises him.*

The zeal of God, in Rom. x. 2, is evidently *the zeal for God,* and must therefore be rendered accordingly, பராபரனுக்காக வயிராக் கியம்.

The stone of stumbling, இடறுதற்குத்தக்ககல் not இடறுதலினுடைய கல்.

2. When it denotes *from among, out of,* the ablative in இல் with சில, or some such word, must be used, as:

You may eat of all the fruits in the garden, தோட்டத்திலுள்ள சகல பழங்களிலுஞ்சில சாப்பிடலாம்.

He is a friend of mine, இவர் என்சிநேகிதர்களிலொருவர்.

At last all the people of the world shall be judged, கடைசியிலே உலகத்திலுள்ளயாவரும் நியாயத்தீர்ப்பையடைவார்கள்.

Take 12 *pieces of the* 24, அந்த இருபத்திநான்கு துண்டுகளிற் பன்னிரண்டு துண்டுக்களை யெடுத்துக்கொள்.

3. When it means *concerning, relating to,* குறித்து is used, as:

When I told him of the affair, he was amazed, நான இந்தக்காரியத் தைக்குறித்து அவனுடனேபேசினபொழுது அவன் ஆச்சரியப்பட் டான் or இந்தக்காரியத்தை யவனுக்குச் சொன்னபொழுது.

4. When it is the sign of a genitive, qualifying its governing word, என்னும் must be used, as:

The land of Judea, யூதேயா என்னுந்தேசம், or merely, யூதேயா தேசம்.

He anointed him with the oil of gladness, சந்தோஷமென்னுந்தயிலத் தை அவருக்கு அபிஷேகம்பண்ணினார்.

He has clothed me with the garment of righteousness, நீதியென்னும் வஸ்திரத்தை யெனக்குடுத்தினார்.

5. When it denotes *property* or *condition,* meaning as much as *having,* the Tamulian uses உடைய, உள்ள; and if the meaning be negative, இல்லாத, as:

He is the king of glory, அவரேமகிமையுடைய இராசா, (or மகிமை யுள்ள.)

He is a man of fortune, அவன் ஆஸ்திகளையுடையவன்.

He has no coach of his own, சொந்தமானவண்டியவருக்கில்லை.

She is a woman of great abilities, அவள்மிகுந்தபுத்தியையுடையவள்.

6. When it denotes *power* or *choice,* as the cause of a thing, the ablative causal is used, as:

Of ourselves we can do no real good, நம்மாலே மெய்யான நன்மை செய்யத்திராணியில்லை.

7. When it denotes *extraction,* or *belonging to,* and in a few other connexions, it must be given according to the sense in Tamil, thus:

He is of an ancient family, அவன் பூர்வீகமான குடும்பத்திற்பிறந்தவன்.

This is an affair of the cabinet, இது இராசசபைக்கேற்றகாரியம்.

I am of the Tamil nation, நான்தமிழன்.

Of necessity, வேண்டுவதாய், அவசியமாய்.

Of a truth, மெய்யாய், நிச்சயமாய்.

Of late he has not come, போனமாதத்திலே (or போனவாரத்திலே) அவன் வரவில்லை or சிலகாலம் அவன்வரவில்லை.

38. *On,* or *upon.*

1. With regard to place or situation, it must be rendered by மேல, or by the ablative of place, as:

A city set on a hill cannot be hid, மலையின்மேல் (or மலையில்) உண்டாக்கப்பட்ட பட்டணம் மறைவாயிருக்கமாட்டாது.

Bombay stands on a island, பம்பைப்பட்டணம் ஒருதீவிலே இருக்கின்றது.

The guilt be upon your head, இந்தக்குற்றம் உன் தலையின்மேலிருப்பதாக.

2. When it denotes *a particular day,* the same case in இல் must be used, as:

He died on the 12*th of March,* அவன் பங்குனிமாதம் ௰௨ தேய்தியிலே யிறந்துபோனான்.

3. When it means *in immediate consequence of,* மாத்திரத்திலே or உடனே expresses it, as:

Upon one kind word he was reconciled, as: நல்லவார்த்தைகளில் ஒரே வார்த்தையைச்சொன்னமாத்திரத்திலே (or சொன்னவுடனே) அவன்சமாதானப்பட்டான்.

The ablative causal may also be used, particularly when it means simply *in consequence of,* as:

He valued himself much upon his high birth, தான் உயர்குலத்திற் பிறந்ததினாலே (or உயர்குலத்தானானதினாலே) மிகவும் மேன்மை பாராட்டினான்.

4. When it means *relating to, with respect to,* குறித்து must be used, as:

Locke wrote upon Government, உலோக்கென்பவர் துரைத்தனஞ் செய்கிறதைக்குறித்து எழுதினர்.

I was silent upon questions which I did not understand, எனக்குத் தெரியாதகாரியங்களைக்குறித்து நான் பேசாமலிருந்தேன்.

5. When it means *in consideration of,* the Tamulian uses நினைத்து, பார்த்து, கேட்டு, நம்பி, or any other verb suiting the connexion, as:

He surrendered upon splendid promises, மிகுந்தபிரயோசனமுள்ள வாக்குத்தத்தங்களை யவன்கேட்டு ஒப்புக்கொடுத்தான்.

I do it upon your word, நான் உம்முடையவார்த்தையைநம்பிச்செய்கிறேன், or நீர் சொன்னதினாலே செய்கிறேன், or உம்முடைய வார்த்தையின்மேல் இதைச்செய்கிறேன்.

6. When it denotes *by, the means of support,* the causal ablative must be used, as:

He lives solely upon water and rice, சோற்றினாலுந் தண்ணீரினாலும் மாத்திரம் பிழைக்கிறான் or சோறுந்தண்ணீரும் மாத்திரஞ்சாப்பிட்டுப் பிழைக்கிறான்.

7. In different connexions, it must be differently expressed; a variety of instances is here given, as:

Upon such terms I also would undertake the business, இப்படியானால், நானும் இந்தவேலையைச்செய்வேன்.

On God's providence our hopes depend, பராபரன் விசாரிப்பாரென்று நாம் நம்பிக்காத்துக்கொண்டிருக்கிறோம், or merely நம்புகிறோம், or பராபரனுடையவிசாரிப்பின்மேலே நம்பிக்கையாயிருக்கிறோம்.

They went on foot, காலால் நடந்துபோனார்கள்.

I came on horseback, குதிரையின்மேலேறிவந்தேன் or குதிரையின் மேல்வந்தேன்.

It happened on a sudden, இதுசடுதியாய்நடந்தது.

He did this on purpose, அவன் மனதறிய இப்படிச்செய்தான்.

Do not go there on pain of death, மரணத்துக்குத்தப்பவேண்டில் அங்கேபோகாதிரு, or நீ யங்கேபோகக்கூடாது. போனால், உனக்கு மரணஆக்கினைவரும்.

From on high, உயரத்திலிருந்து.

On the contrary, அதற்கெதிராக.

She played on the harp, வீணையைவாசித்தாள்.

On my part, there is no objection, நான் ஒரு விரோதமுஞ்சொல்லமாட்டேன்.

Upon this he said as follows, அதின்பின்பு (or அதைக்கேட்டு) அவன் சொன்னதாவது.

39. *Or.*

For the meaning of this conjunction, when it answers to *either*, see *Either*.

When it stands alone, and denotes *opposition*, it must be rendered by இல்லாவிட்டால், or அல்லவென்றால், thus:

Give me to eat, or *I die*, எனக்குச்சாப்பாடுதரவேண்டும். இல்லா விட்டாற்சாவேன்.

Repent, or *you will perish*, மனந்திரும்பு அல்லவென்றாற்கெட்டுப் போவாய்.

When it signifies *distribution*, ஆவது will express it, which must be added to every word or clause which is distributed, thus:

Send (me) gold, silver, copper or *lead*, பொன்னையாவது, வெள்ளி யையாவது, செம்பையாவது, ஈயத்தையாவது அனுப்பு.

Or அல்லது may be prefixed to every such word, except the first, thus:

Let the carts bring lime or *sand* or *stones*, வண்டிகள் சுண்ணும்பை அல்லது மணலை அல்லது கற்களைக்கொண்டுவரட்டும்.

These subjects are usually taken from the scriptures or *from the life of some saint*, இப்படிப்பட்ட பொருள்களைத்தேவவசனத்திலிருந்தாவது ஒருமுனியினுடைய நடக்கைப்புத்தகத்திலிருந்தாவதுஎடுத்துக்கொள் வார்கள். If அல்லது be used, then எடுத்துக்கொள்வார்கள் must be put also after the first இருந்து, thus: தேவவசனத்திலிருந்து எடுத்துக்கொள்வார்கள், அல்லது ஒரு முனியினுடைய, &c. &c.

40. *Otherwise* or *Else*

is literally expressed by மற்றப்படி, or வேறுபிரகாரமாக, but neither will always suit; the former is the least proper; the latter may be used when *otherwise* stands adverbially, as:

If you act otherwise, I shall get angry, நீ வேறு பிரகாரமாய்ச்செய்தாற் கோபமாயிருப்பேன், (or வேறுவிதமாய்.)

But in other cases, the Tamulian repeats the verb of the preceding action, which is affected by *otherwise* or *else*, put in the subjunctive mode, as:

Thou desirest not sacrifice, else I would give it, பலிகளைத்தேவரீர் விரும்பமாட்டீர் விரும்பினாற்செலுத்துவேன்.

He did not pay the money; otherwise I should have given him the goods, பணத்தையவன்செலுத்தவில்லைச்செலுத்தினானுற் பண்டங்களை யவனுக்குக்கொடுப்பேன்.

41. *Over.*

1. With regard to *place*, is expressed by மேல், as:

He poured water over my head, அவன் என்தலையின்மேற்றண்ணீர் வார்த்தான்.

2. When it denotes *superiority,* மேலாய் or மேன்மையாய், with the dative, expresses it, as:

The king is over his ministers, இராசாத் தன்னுடைய மந்திரிகளுக்கு மேலாயிருக்கிறன்.

3. When it means *through, diffusely,* எங்கும் is used, as:

His fame spread all over the country, அவருடையகீர்த்தி தேசமெங் குஞ்சென்றது or பரவிற்று.

42. *Out.*

1. When it means *outside* adverbially, it is expressed by, வெளியே புறம்பே, as:

He is out, அவன்வெளியேயிருக்கிறன்.

2. When united with *of,* it must frequently be differently expressed; though வெளியே, &c. may often be used when it is opposed to *inside;* yet much depends upon the verb with which it stands connected, as:

He is out of the house, அவன்வெளியிலேயிருக்கிறன்.
He went out of the house, அவன்வீட்டைவிட்டுவெளியேபோனுன்.
He is out of the camp, அவன்பாளயத்துக்குப்புறம்பேயிருக்கிறன்.
In the morning all the ships were out of sight, காலமே (காலையில்) எல்லாக்கப்பல்களுங் கண்ணுக்கு எட்டாத தூரமாய்ப்போயின.
He is out of the king's favour, இராசாவினுடையதயவையிழந்தான்.
He is out of humour, அவன்பிரமைகொண்டிருக்கிறன் or அவன் சஞ்சலமுள்ளவனுயிருக்கிறன்.
He is now out of debt, அவனுக்கிப்பொழுதுகடனில்லை or அவனு டையகடன் இப்பொழுதுதீர்ந்தது.
I went out of the way, வழியைவிட்டுவிலகினேன்.
He is out of danger, அவனுக்குமோசமில்லை.
The fire is out, நெருப்பு அவிந்துபோயிற்று.
He was distressed out of measure, அவன் அளவில்லாத உபத்திரவப் பட்டான், or if the sense be active, அவன்மிகவும் or மிகுதி யாய் உபத்திரவப்படுத்தப்பட்டான்.

3. When *out of* means the same as *because of,* the causal ablative is required, as:

I gave him 20 pagodas out of compassion, இரக்கத்தினுலே நான் அவ னுக்கு (உ௰) வராகனைக்கொடுத்தேன் or நான் அவனுக்கிரங்கி உ௰ வராகனை, &c.

4. Sometimes it means *from,* when the ablative of place with இருந்து or இருந்த, is required, as:

He plucked the book out of my hands, என்கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கினன்.

He took the things out of the box, பெட்டியிலிருந்துபண்டங்களையெ டுத்தான்.

This history is taken out of the Bible, இந்தச்சரித்திரஞ் சத்தியவேதத் திலிருந்தெடுக்கப்பட்டது or வேதத்திலெடுக்கப்பட்டது.

43. *Perhaps*

may be rendered by ஒருவேளை; but it often happens that it cannot be rendered at all, and the sentence must either receive another form, or when the word means *it may be,* the simple future tense will express it, thus:

Perhaps he will come, ஒருவேளை வருவான்.

It was perhaps negligence which brought him into these embarrassments, அவன் இப்படிப்பட்ட வருத்தத்தில் அகப்பட்டதற்குத்தாமதம் ஏதுவாயிருக்கும்.

The simplest method, perhaps, will be to dismiss him, அவனைத்தள்ளி விட்டால் நன்மையாயிருக்கும், or நன்மையாயிருக்குமென்று தோன் றுகின்றது.

44. *Rather*

cannot be rendered by any particular word in Tamil; the sense must be determined and accordingly rendered, thus:

It would rather retard than promote instruction, அது அறிவு சீக்கிர மாய்வரும்படிக்கல்லத் தாமதமாய் வரும்படிக்கேதுவாயிருக்கும்.

I had rather you go and ask for the bill, நீபோய்ப்பணப்பத்திரத் தைக்கேட்டுக்கொண்டால் எனக்குச்சந்தோஷமாயிருக்கும்.

Rather than lose my soul, I shall give up sin, என்னுத்துமா நித்திய வாழ்வையிழந்துபோகாதபடிக்குப் பாவத்தை விட்டுவிடுவேன்.

This is rather too much rain, இந்தமழைதகுதிக்கதிகமாயிருக்கும்.

45. *Since.*

1. When it means *from,* முதல் or முதற்கொண்டு, expresses it, as:
Since times immemorial, men have departed from the way of truth, நமக்குத்தெரியாத பூர்வீககாலம்முதற்கொண்டு மனிதர்கள் சத்திய மார்க்கத்தைவிட்டு விலகியிருக்கிறார்கள்.

2. When adverbially used, meaning *ago, before this,* முதல், with the corresponding particle, வரைக்கும் or பரியந்தம், may be used, or the verbal participle, as:

It is now twelve years since the earthquake took place, பூமியதிர்ச்சியுண் டானதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டுவருடமாயிற்று or பூமி யதிர்ச்சியுண்டாகிப் பன்னிரண்டு வருடமாயிற்று.

3. When it means *because that, whereas, as,* படியினாலே, with a relative participle, or the causal ablative must be used, as:

Since then great circumspection is required, be careful to use it, மிகவுஞ் சாவதானமாயிருக்கவேண்டியபடியால் (or வேண்டுவதால்) நீ சாவதானமாயிரு.

Since ye believe in Christ, do as he has commanded you, நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறபடியால், அவர் கட்டளையிட்டதைச் செய்வீர்களாக.

The expression *ever since* is sufficiently expressed by முதற்கொண்டு, as in the before-mentioned instances.

46. *Still.*

When this adverb means *nevertheless, notwithstanding,* the subjunctive mode expresses it, as:

நான் அவனுக்குப்புத்திசொல்லியும், அவன் அப்படிச்செய்தான்.

When it means *in an increasing degree,* பின்னும் will express it, as:

He went on still faster, அவன்பின்னும் அதிகவிசையாய்நடந்தான்.

When it means *in continuance;* பின்னும் will be proper, as:

He still studies the Veda, அவன்பின்னும்வேதத்தைப்படிக்கிறான்.

If இன்னம் be put, the sense will be, *that hitherto he did not get on in learning, and that therefore he still learns.*

When it means *besides,* இன்னம் expresses it, as:

I have still another piece of news, இன்னம் ஒருசெய்தியுண்டு.

47. *Than*

is expressed in Tamil by the dative, and by the ablative in இல், with உம், without any change in the adjective or adverb, though occasionally அதிக or அதிகமாய், may be added, as:

This is better than that, இதற்கு அதுநல்லது or நலமாயிருக்கின்றது.
I am greater than he, அவனிலும் நான்பெரியவன்.
This writing is worse than the other, அந்தஎழுத்திலும் இதுஅவலட்சணமாயிருக்கின்றது.

Observe that these forms imply that both have the same quality, only the one is better or worse; when, therefore, the sense is that the one, with which another thing is compared, has nothing of the quality at all, or one contrary to it, the comparative form cannot be used in Tamil; one of the qualities must be directly denied, thus:

It is better to say the truth than to lie, பொய்பேசாமற் சத்தியமானதைச்சொல்லுகிறதேநலம். Here if you say பொய்பேசுகிறதிலும், it implies that to a certain degree falsehood also is good.

It becomes us more to love than to hate our neighbour, பிறனைப்பகைக்கிறதல்ல, அவனிடத்தில் அன்புகூருகிறதே நமக்குத் தகுதியாயிருக்கிறது.

It is better to suffer than to do evil, தீமையைச்செய்கிறதல்லத் தீமையைச்சகிக்கிறதேநல்லது.

Note.—Concerning the comparative degree, see § XLVI. 8, and XLVII. 2.

48. *That.*

This conjunction is expressed,

1. When it means *because* or *on account of,* by the dative, with ஆக, or by குறித்து, as:

I am sorry that I cried out, நான்கூக்குரல்பண்ணினதற்காகமனஸ்தாபப்படுகிறேன் or பண்ணினதைக்குறித்து.

2. When it refers to *a consequence,* the clauses must be inverted, and the causal particle used, as:

